

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

**ப.பிரதாப்**



"

காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9 788193 796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 61. நாட்டுப்புறக் கலைகள் நிகழ்த்தப்படும் காலமும் சூழலும்

பா.அஞ்சலி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

நாட்டுப்புறக் கலைகளைப் பல்வேறு ஆய்வாளர்கள் பல்வேறு முறைகளில் வகைப்படுத்தியுள்ளனர். நிகழ்த்து கலைகளில் கலந்துகொள்ளும் கலைஞர்களின் எண்ணிக்கையே அடிப்படையாகக் கொண்டு தனியார் கலை, குழுவினர் கலை (group art) என்றும் படித்துள்ளார். மயிலாட்டம், கரகாட்டம், தேவராட்டம், குதிரையாட்டம், காவடியாட்டம், நொண்டி நாடகம் போன்றவை தனியார் கலைகளாக அமைகின்றன. வில்லுப்பாட்டு, தேவராட்டம் தெருக்கூத்து போன்றவை குழுவினர் கலைகளாக அமைகின்றன என்கிறார். கலந்து கொள்ளும் கலைஞர்களின் பால் (Sex) அடிப்படையில் ஆடவர் கலை, மகளிர் கலை, ஆடவர் மகளிர் கலை என்றும் நிகழ்த்தப்படும் காலம், சூழல், நோக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூகம் சார் கலைகள் (Society based arts) சமயம் சார் கலைகள் (Religion based arts) என்றும் பலவாறாகப் பிரித்துக் கூறிவிட்டு, கலைகளை வகைப்படுத்துவது சிக்கலானது.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளை அ. நாட்டுப்புற இசை நிகழ்ச்சிகள், ஆ. ஆட்டங்கள் என்று இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளனர்.

கரகாட்டம், பொய்க்கால்க் குதிரை ஆட்டம், மாடு ஆட்டம், மயிலாட்டம், புலியாட்டம், தேவராட்டம், சேவையாட்டம் போன்றவை கருவி இசை ஆட்டங்களில் அடங்கும். அவைகளின் காலமும் சூழலும் குறித்து காணலாம்.

இன்றைய கால கட்டத்தில் தமிழக நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் நிகழ்த்தப்படும் சூழல்களை ஒன்பது பெரும் பிரிவுகளில் அடக்கலாம். நிகழ்த்தப்படும் சூழல், நோக்கம், நிகழ்த்தினர், சாதி, பார்வையாளர், நிகழிடம் போன்ற விவரங்கள் கூறப்படுகின்றன.

நாட்டுப்புறக் கலைகள் எந்தெந்தச் சூழல்களில் நிகழ்த்தப்படுகின்றன என்பதை காணலாம். இதனை எளிதில் அறிந்து கொள்வதற்கு ஏற்ப பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

**கரகாட்டம்**

மண்ணாலோ செம்பு பித்தளை முதலான உலோகத்தாலோ சிறு பானை வடிவில் உருவாக்கப்பட்டு, பயன்படுத்தப்படும் சூழலுக்கேற்ப ஒப்பனை செய்யப்படும் கரகத்தினைத் தலையில் வைத்துக் கொண்டு கீழே விழுந்து விடாமல் கருவி இசைக்கேற்ப ஆடப்படும் ஆட்டத்தினை கரகாட்டம் என்று சுட்டுகின்றனர்.

தமிழகத்தின் இன்று ஆடப்படும் சூழல் மற்றும் நோக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது கரகாட்டத்தின் இரு நிலைகளைக் காணமுடிகின்றது

1. அம்மன் கோயில் வழிபாட்டுச் சடங்கின் ஒரு அங்கமாகத் திகமும் கரகாட்டம்
2. கோயில் திருவிழா ஊர்வலங்கள் அரசியல் ஊர்வலங்கள் வாழ்வியல் சடங்குகள் தொடர்பான ஊர்வலங்கள் வரவேற்பு நிகழ்ச்சிகள் முதலான நிகழ்ச்சிகளின் பொழுதுபோக்காக ஆடப்படும் கரகாட்டம்.

**கரகாட்டத்தின் காலம் குறித்து காணலாம்**

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதலே கரகத்தை தலையில் வைத்து ஆடும் கரகாட்டம் மக்களிடையே இருந்து வந்ததற்கான சான்றுகள் நா. வேலுச்சாமி விரிவாக எடுத்துரைத்துள்ளார் அவற்றின் வழிப் பெறப்படும் சில செய்திகள் வருமாறு,

| வ. எ | நாட்டுப்புற கலைகள் | நிகழ்த்தப்படும் சூழல்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கோயில் சடங்கு | கோயில் விழா | வாழ்வுச் சடங்கு | சாவுச் சடங்கு | அரசியல் விழா | அரசு விழா | பிரச்சாரம் | அரசு மற்றும் தனியார் | யாசித்தல் |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | கரகாட்டம் | * | * | * | | * | * | * | * | |
| 2 | காவடியாட்டம் | * | * | | | * | * | * | * | * |
| 3 | பொய்க்கால் குதிரை | | * | * | | * | * | * | * | |
| 4 | தப்பாட்டம் | * | * | * | * | * | * | * | * | |
| 5 | மயிலாட்டம் | | * | * | | * | * | * | * | |
| 6 | கரடியாட்டம் | | * | * | | * | * | * | * | |
| 7 | புலியாட்டம் | | * | * | | * | * | * | * | |
| 8 | தேவராட்டம் | * | * | * | * | * | * | * | * | * |
| 9 | வழியாட்டம் | | * | | | * | * | * | * | |
| 10 | குறவன் குறத்தி ஆட்டம் | | * | | * | * | * | * | * | |
| 11 | கைச்சிலம்பாட்டம் | * | * | * | * | * | | * | * | |
| 12 | கும்மி | * | * | * | * | | * | * | * | * |
| 13 | கோலாட்டம் | | * | * | | * | * | * | * | |
| 14 | ஒயிலாட்டம் | * | * | | | | * | | * | |
| 15 | தெருக்கூத்து | * | * | * | * | * | * | * | * | |
| 16 | பாவைக்கூத்து | | * | | | * | * | * | * | |
| 17 | சிலம்பாட்டம் | | * | * | | * | * | * | * | |

1. தொல்காப்பியம், புறநானூறு(1:12), கலித்தொகை(9:2, 113:4), ஆசாரக்கோவை(43:3), சிலப்பதிகாரம் (30:64,90), மணிமேகலை(பதிகம்) ஆகியவற்றின் பயன்படுத்தப்படும் கரகம் என்ற சொல் கமண்டலம் பொருளைத் தருகிறது.

2. கண்ணன் குடக்கூத்து ஆடியதாக பல சான்றுகள் உள்ளன.

3. கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கும் ஐந்தாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகக் கருதப்படும் 'வராஹோபநித்' என்னும் வடமொழி நூலில் கும்பாட்டம் ஆடும் பெண்கள் சுட்டப்படுகிறார்கள்.

தொடக்க காலத்தில் பெண்கள் கரகாட்டம் ஆடி இருந்தாலும் இடைக்காலத்தில் அவர்கள் அவ்வாட்டத்திலிருந்து விலகி இருந்தார்கள் அல்லது விலக்கி வைக்கப்பட்டிருந்தார்கள் என்று தெரிகிறது.

### காவடி ஆட்டம்

காவடியைத் தோளில் சுமந்து நையாண்டி மேள இசைக் கேற்ப ஆண் ஒருவரால் ஆடப்படும் ஆட்டம் காவடியாட்டம் என்று அழைக்கப்படுகிறது.

முருகன் கோயில்களுக்கு உரியதாக இருந்து வந்த காவடி எடுத்தல் தற்போது அய்யனார் கோவில்களிலும் காளியம்மன், மாரியம்மன் முதலான அம்மன் கோவிகளிலும் நிகழ்வதைச் செய்தித்தாள்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

தமிழகத்தில் நிகழ்த்தப்பெறும் நாட்டுப்புறக் கலை வடிவங்களில் 'காவடியாட்டம்' குறிப்பிடத்தக்கது. காவடியில் பொருட்களைச் சுமக்கும் பழக்கம் தென்னகத்தில் பரவலாகக் காணப்பட்டாலும் அது ஒரு சிறப்பான ஆட்டக்கலை வடிவமாக வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழகத்தில் மட்டுமே என்று தெரிகிறது.

### பொய்க்கால் குதிரையாட்டம்

சுமார் ஒன்றரை அடி உயர மரக்கட்டையைக் காலின் கட்டி

அதன்மீது நின்ற வண்ணம், துணிகள் காகிதங்களில் உருவாக்கப்பட்ட பொய் குதிரையின் நடுவில் நுழைந்து அதனைத் தோளில் தொங்குமாறு கட்டிக்கொண்டு, நையாண்டி மேள இசைக்கு ஏற்ப ஆணும் பெண்ணும் ராசா - ராணி வேடத்தில் ஆடும் ஆட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகும்.

பொய்க்கால் குதிரை ஆட்டத்தின் தோற்ற வரலாறு குறித்து கு.முருகேசன் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

1910 களில் நாகப்பட்டினத்தில் அல்லாப்பச்சை என்பவர் எழுதிய 'அப்பாஜி' என்ற நாடகத்தில் அப்பாஜி மன்னர் குதிரைமீது வருவதாக ஒரு காட்சி வருமென்றும் அக்காட்சிக்காகத் திருவையாறு ராமகிருஷ்ணன் நாயுடு என்பவர் குதிரைக்கூறு உருவாக்கியதாகவும் இவர் குறிப்பிடுகிறார். கி.பி.1900 க்கும் 1905-க்கும் இடைப்பட்ட காலத்தில் இக்கலை உருவாக்கப் பட்டிருக்க வேண்டும்.

தமிழகம் தவிர இந்தியாவின் நான்கு மாநிலங்களில் பொய்க்கால் குதிரை ஆட்டம் நிகழ்த்தப்படுவதாக அறிய முடிகின்றது.

### மயிலாட்டம்

மயிலாட்டக் கலைஞர் மயிலாக ஒப்பனை செய்து கொள்ளும்போது மயிலின் கூம்பு போன்ற கழுத்துப் பகுதியைத் தன் தலையில் வைத்துக் கட்டிக் கொள்வார்.

கு. முருகேசன் சேகரித்த தரவுகளின்படி மயில் ஆட்டம் தோன்றி அரை நூற்றாண்டு காலம் ஆகிறது. மயில் ஆட்டத்தின் வரலாறு குறித்து அவர் கூறும் கருத்துக்கள் வருமாறு 'திருச்சியைச் சார்ந்த சுந்தர ராவ் என்பவரே மயில் நடனத்தை முதலில் கண்டுபிடித்து ஆடிய கலைஞராக கருதப்படுகிறார். இவர் 1949 இல் ஆட்டின் பீடி விளம்பரத்திற்காகத் திருச்சியிலிருந்து தஞ்சைக்கு வந்து இந்நடனத்தை ஆடியதாகக் கூறுகிறார்கள். இதன் பிறகே பரதநாட்டியத்தில் மயில் ஆட்டம் புகுத்தப்பட்டது என்றும் இவர் குறிப்படுகிறார்.

## தப்பாட்டம்

தப்பு என்னும் தோற்கருவி அடித்து ஆண்களால் ஆடப்படும் ஆட்டம் 'தப்பாட்டம்' என்று அழைக்கப்படுகிறது. பறையர், சக்கிலியர் முதலிய தாழ்த்தப்பட்ட மக்களால் பறையடித்தல் தப்பாட்டம் நிகழ்த்தப்படுகிறது.

வளைகாப்பு, காதணி விழா, பூப்புநீராட்டு விழா, திருமணம், இறப்பு சடங்குகள், கோயில் திருவிழாக்கள், அரசியல் ஊர்வலங்கள், வரவேற்பு நிகழ்ச்சிகள், வணிக விளம்பர நிகழ்ச்சிகள், கலாச்சார கலை விழாக்கள் என்று பல சூழல்களில் தப்பாட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்துக்கள் மட்டுமின்றி கிருத்துவக் கோயில் நிகழ்ச்சிகளிலும் தப்பாட்டம் நிகழ்த்தப்படுகிறது.

தப்பாட்ட நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப நோக்கங்கள் மாறுபடுகின்றன. குடும்ப மற்றும் கோயில் நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை 'அறிவித்தல் - அழைத்தல்' என்பவை முதன்மையான நோக்கங்களாக உள்ளன.

1. சாமி அடி 2. முகூர்த்த அடி 3. சவாரி அடி 4. சிலம்பு அடி 5. காமட்டி அடி 6. சாவடி 7. ஒத்த அடி 8. கருமாதி - இருமாதி என்று மூன்று சாமாங்களில் தப்படிப்பர் என்று கூறப்படுகிறது.

## தேவராட்டம்

திருமாலின் அருள் பெற்று அவர் வழி வந்த தேவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் கம்பளத்து நாயக்கர் இன ஆண்கள் ஆடும் ஆட்டம் தேவராட்டம் என்று அழைக்கப் படுகிறது.

இந்த ஆட்டங்கள் இராமனுடைய திருமணச் சடங்கில் இடம்பெறும் ஆட்ட வகைகளாக அமைந்துள்ளன என்றும் கூறப்படுகிறது.

தேவராட்டம் ஆந்திரத்தில் இருந்து தமிழகத்தில் குடியேறிய கம்பளத்து நாயக்கர்களின் இனக்குழு ஆட்டமாகக்

காணப்படுவதால் அவர்கள் ஆந்திரத்தில் இருந்து தமிழகத்திற்கு கொண்டு வந்த கலையாக இதனைக் கருதமுடிகிறது. வேறு சாதியினர் இந்த ஆட்டத்தை ஆடுவதில்லை. கம்பளத்து நாயக்கர்கள் தமிழகத்தின் குடியேறிய காலமே தமிழகத் தேவராட்டத்தின் காலமாக கருதலாம்.

## கும்மி

பெண்கள் வயது வேறுபாடில்லாமல் ஒருங்கிணைந்து ஒருவர் பாட ஏனையோர் பின் பாட கைகுவித்துக் கொண்டே வட்டமாகச் சுற்றி வந்து ஆடும் ஆட்டத்தினைக் 'கும்மி' என்று சுட்டுகின்றனர். கும்மிப் பாடல் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

கும்மி தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப் படுகிறது. தமிழகத்தின் வடமாவட்டங்களில் பொழுதுபோக்கை அடிப்படையாகக் கொண்டே கும்மி நிகழ்த்தப்படுகிறது பொங்கல் திருவிழாவை ஒட்டி கரிநாளன்று பெண்கள் கும்மி அடிக்கின்றனர். பொழுதுபோக்கே அடிப்படை நோக்கமாக அமைகின்றது.

புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் முதலான மாவட்டங்களில் கும்மி ஆடும் சூழல் முற்றிலும் மாறுபடுகிறது. இம்மாவட்டங்களில் மழை வேண்டி அம்மனுக்கு நிகழ்த்தப்படும் முளைப்பாரிச் சடங்குகளின் போது பெண்கள் கும்மி கொட்டுகின்றனர்.

## வரலாறு

கும்மியாட்டம் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகக் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் குரவை ஆட்டம் கும்மியோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்படுகிறது.

'கொம்பைக் கொட்டல்' என்ற தொடரும் நமது சிந்தனைக்கு உரியதாக உள்ளது. அகநானூறு, குறுந்தொகை, சங்க இலக்கிய நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் 'கொம்பை' என்ற சொல்லானது 'திரட்சி அல்லது படுத்த' என்னும் பொருளில் வருகிறது. புதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்த பழமொழியில்,

"நோற்ற பெருமை யுடையாருங் கூற்றம்
புறம் கொம்பை கொட்டினார் இல்"

என்று வரும் இடத்தில் "கொம்பை" என்ற சொல் "கைகளைக் குவித்துக் கொட்டுதல்" என்ற பொருளைத் தருகிறது.

சீவக சிந்தாமணியில்,

"குஞ்சரம் கூற்றொடு கொம்பை கொட்டுவ"

என்று கூறும் இடத்திலும்.

"கூற்றத்தைக் கொம்மை கொட்டியக்
குலத்தொடு முடியுமென்பார்"

என்று வரும் இடத்திலும், நைடதத்தில்,

"கூற்றொடுங் கொம்பை கொட்டி குவிக்கும்"

என்று புகழும் கூழ்நிலையிலும் கொம்பை முன்னர் குறிப்பிட்ட பொருளிலேயே பயன்படுத்தப் பெற்றுள்ளது.

ஒயிலாட்டம்

ஒயிலாட்டம் ஆண்கள் ஆடும் ஆட்டமாக இருப்பதால் "கம்பீரமும் எடுப்பும் மிக்க ஆட்டம்" என்று ஒயிலாட்டத்திற்கு பொருள் கூறலாம்.

நோன்பு சாட்டியது முதல் அடுத்த செவ்வாயன்று விழா நடக்கும் வரை தினமும் பெண்கள், முன்னிரவு தொடங்கி நள்ளிரவு வரை சாமி வீட்டு முன் கும்மி கொட்டுவர். ஆண்கள் ஒயில் ஆடுவர்.

சடங்குச் சூழலில் ஆடப்படும் ஒயிலாட்டம் "காணிக்கை ஆட்டம்" என்று சுட்டப்படுகிறது. ஒயிலாட்டம் ஆடுவோர் எண்ணிக்கை இடத்துக்கு இடம் அல்லது ஆடப்படும் சூழல்களுக்கு ஏற்ப மாறுபடுகிறது.

கி.பி. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்திலிருந்து இலங்கையின் குடியேறி அங்கு மலையகத்தில் வாழும் தமிழர்கள்

பொங்கல் விழாவின் போது ஒயிலாட்டம் ஆடுவர் என்று தெரிகிறது.

இவ்வாறு தமிழகத்தின் பல பகுதிகளிலும் இலங்கையிலும் வெவ்வேறு நோக்கங்களுக்காக ஒயிலாட்டம் நிகழ்த்தப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

முடிவுரை

நாட்டுப்புறக் கலைகள் எக்காலகட்டத்தில் எவ்வெச் சூழல்களில் நிகழ்த்தப்படுகின்றன என்பதைத் தெளிவாக விளக்குகின்றது. கோயில் சடங்குகளில் மட்டுமே ஆடப்பட்டு வந்த பல கலைகள் தற்போது வெவ்வேறு சூழல்களில் நிகழ்த்தப்படுவதை அறிந்து கொள்ள முடிகிறது. இந்த மாற்றம் கடந்த **40** அல்லது **45** ஆண்டுகளாக நிகழ்ந்து வருகிறது. அவற்றுள் சேவையாட்டம், தேவராட்டம், ஒயிலாட்டம், கைச்சிலம்பாட்டம், கணியன் கூத்து போன்றவை மிகச் சமீபகாலத்தில் கோயில் சடங்குகளில் இருந்து பொது மேடைக்கும் வந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

பயன்பட்ட நூல்கள்


1. தமிழக நாட்டுப்புற நடனங்கள் (தொகுதி -2)
   - முனைவர் கு.முருகேசன்
2. நாட்டுப்புற மண்ணும் மக்களும்
   - கரு. அழ. குணசேகரன்
3. நாட்டுப்புறக் கலைகள்
   - முனைவர் ஆறு. இராமநாதன்